(மு்பகல் 10-50).

8. அறிவிப்புகள்

(அ) துணை மானியக் கோரிக்கைகள். 1983-84, வெட்டுத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983-84ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவு குறித்த துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் பேரவை விதி 205-ன் கீழ் 24-3-1984 மாலை 3 மணிக்குள் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

9. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ). கோரிக்கை எண் 22— கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,97,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 23,97,66,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100."

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரு நகரங்களில் பாதுகாப்பற்ற முறையில் மாடுகள் வெளியில் திரிந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தவும், அவைகளை அரசே காப்பாற்ற பண்ணை அமைக்கவும் நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,97,66,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS